9 வைகாசி 2052
23rd May 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

# Journal of Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : இணையவழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2021
தமிழ்த்துறை
தூய மரியன்னை கல்லூரி ( தன்னாட்சி )
(தேசியதரக்குழு மதிப்பீட்டில் 'A+'தகுதி பெற்றது)
தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா

## தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

சிறப்பிதழ் ஆசிரியர்கள்
**Special Issues**

அருட்சகோதரி முனைவர் அ. ஆரோக்கிய ஜெனிசியஸ் அல்போன்ஸ்
முனைவர் ந. சண்முக வடிவு (எ) சாந்தி
முனைவர் அ.ம. சோனல்

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

22 பகுதி-2 Part -2

Scanned with CamScanner

சிறப்பிதழ்
Special Issue

9 வைகாசி 2052
23rd May 2021

ISSN : 2321 - 984X


| | | |
|---|---|---|
| 40. ஜோ.பென்னி | சங்க இலக்கியங்களில் தொழில்நுட்ப அறிவியல் | 229-236 |
| 41. பா. ம ஜெயகலா | பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியல் | 237-243 |
| 42. வெ.நிர்மலா | இலக்கியங்களில் அறிவியல் நுட்பங்கள் | 244-248 |
| 43. சி.சுபா | புறநானூற்றில் அறிவியல் சிந்தனைகள் | 249-254 |
| 44. இரா. ஜெபா | சங்கப் புற இலக்கியங்களில் நீர் | 255-259 |
| 45. சி. ராஜலெட்சுமி | செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் மருந்து | 260-263 |
| 46. செ.அன்புராணி | தமிழ் இலக்கியத்தில் உலகத் தோற்றமும் ஐம்பூதச் சிந்தனையும் | 264-269 |
| 47. மு.செல்வக்குமார் | தமிழில் அறிவியல் சிந்தனைகள் | 270-280 |
| 48. சு. விமலா | பருவ இதழ்களில் அறிவியல் சிந்தனைகள் | 281-286 |
| 49. ஜி.ஆர்.ஜஸ்சூரியா | தமிழ் இலக்கியத்தில் மரக்கலம் | 287-291 |
| 50. ப. ஜெயசெல்வி | இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள் | 292-297 |
| 51. மு.முஜிபுர்ரகுமான் | காப்பியங்களில் அறிவியல் சிந்தனைகள் | 298-303 |
| 52.ச. லீமா | எட்டுத்தொகையில் அறிவியல் செய்திகள் | 304-311 |
| 53. கே.எஸ். அன்பு கலா | கவிஞர் வைரமுத்துவின் கவிதைகளில் புலப்படும் அறிவியல் செய்திகள் | 312-317 |
| 54. செ.ஸ்டாலின் | அறிவியல் கோட்பாட்டு அடிப்படையில் தமிழிலக்கிய நிகழ்வுகள் | 318-323 |
| 55. செ. சிவகாமிசுந்தரி | வள்ளுவரின் அறிவியற் சிந்தனைகள் | 324-329 |
| 56. செ.சுனிதா | அறிவியல் பெட்டகம்-தமிழ் இலக்கியங்கள் | 330-336 |
| 57. அ.கிரேஸி ஜெனோவா | அகநானூற்றில் அறிவியல் சிந்தனைகள் | 337-346 |
| 58. ஜோ. ஜோசப்பின் ஜீலியட் | சங்க இலக்கியம் கூறும் அறிவியல் வானியல் செய்திகள் | 347-350 |
| 59. மு.புஷ்பகவல்லி | திருமந்திரத்தின் வழி உயிர்ப்புத்திறன் | 351-357 |
| 60. வெ. சித்ராதேவி | அருணகிரியார் அருட்பார்வையில் அறிவியல் | 358-363 |
| 61. தெ.வெற்றிச்செல்வன் | மருத்துவ அறிவியல் அகராதி - மருத்துவர் சம்பத்குமாரின் மொழிப் புலமையும் மருத்துவப் புலமையும் | 364-368 |
| 62. கே.ஆர். கமலாமுருகன் | புதுக்கவிதைகளில் அறிவியல் பதிவுகள் | 369-374 |
| 63. ஆ. கிருஷ்ணவேணி | தமிழ் இலக்கியங்களில் மருத்துவம் | 375-378 |
| 64. க.சுப்புலட்சுமி | சங்ககால உயிரினச்சூழலில் மானும் மானுடமும் | 379-385 |
| 65. ஏஞ்சலின் பெராக்கா & அலிஸ் ராணி | ஐம்பூதம் கூறும் யாத்திரிகம் | 386-388 |
| 66. செ.சாந்தி | அற இலக்கியங்களில் அறிவியல் | 389-392 |
| 67. க.முருகலெட்சுமி | திருக்குறளில் அறிவியல் சிந்தனைகள் | 393-399 |
| 68. இரா.ஜீவாராணி | பத்துப்பாட்டில் நெசவுத் தொழில்நுட்ப அறிவியல் | 400-402 |
| 69. இல. பிரவீன் பீற்றர் ஞானையா | தமிழ் இலக்கியத்தில் அறிவியல் செய்திகள் | 403-408 |
| 70. ஜெ.ஜெ. சூரியபிரபா | எட்டுத்தொகை அக இலக்கியங்களில் அறிவியல் | 409-414 |
| 71. கா. செல்வகுமார் | பண்டைய தமிழர்களின் அறிவியல் சிந்தனை - ஒரு பார்வை | 415-419 |
| 72. டே. ரமணி | தமிழ் இலக்கியங்களில் அறிவியல் | 420-423 |
| 73. ஜே. ஜினிதா மெர்லின் | சங்க இலக்கியத்தில் அறிவியல் செய்திகள் | 424-428 |
| 74. ந.ஜெயவசந்தி | தொல்காப்பியமும் அறிவியலும் | 429-432 |
| 75. கு. நீதா | சித்தர்களும் அறிவியலும் | 433-436 |
| 76. வே.சாந்தி | தமிழ் இலக்கியங்களில் அறிவியல் | 437-441 |
| 77. அ. லீமா | திருமந்திரத்தில் ஐம்பெரும் பூதங்கள் | 442-447 |


Published by : Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned with CamScanner

# தமிழ் இலக்கியத்தில் உலகத் தோற்றமும் ஐம்பூதச் சிந்தனையும்

முனைவர் செ.அன்புராணி
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 625 018

**ஆய்வுச் சுருக்கம்**

தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், பக்தி இலக்கியம், ஆகிய தமிழப் படைப்புகளில் இடம்பெறும் ஐம்பூதச் சிந்தனைகளையும், உலகத் தோற்றம் பற்றிய பெருவெடிப்புக் கொள்கையையும் ஒப்பிட்டு, அறிவியலும் இலக்கியமும் ஆன்மீகமும் உலகத்தை எவ்வாறு விளக்க முற்பட்டுள்ளன என்பதை எடுத்துரைப்பதாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**முன்னுரை :**

உலகின் தோற்றம் குறித்துப் பல்வேறு கதைகள் வழங்கப்படுகின்றன. ஆனமீகத்தில் உலகின் பல்வேறு சமயங்களும் பலவிதமான கருத்துக்களைத் தெரியப்படுத்தியுள்ளன. இலக்கியப் படைப்பாளர்களும் தம் படைப்புக்களில் உலகத் தோற்றம் குறித்துக் கருத்துத் தெரிவிக்காமல் இல்லை. அறிவியல் அறிஞர்களும் தீவிர ஆராய்ச்சிகளுக்குப் பிறகு உலகின் தோற்றம் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழ் இலக்கியங்களில் காணப்படும் ஐம்பூதங்கள் பற்றிய சிந்தனைகளைக் கொண்டு, உலகத் தோற்றம் பற்றிய தமிழறிஞர்களின் (புலவர்கள்) கருத்துக்களை அறிவதன் வாயிலாக இலக்கியங்கள் வெறும் கற்பனைப் படைப்பாக இல்லாமல் அறிவியல் சிந்தனைகளைக் கொண்ட கருவூலங்களாக அமைகின்றன என்பதை அறிய இயலும். இக்கட்டுரை தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், பக்தி இலக்கியம், ஆகிய தமிழப் படைப்புகளில் இடம்பெறும் ஐம்பூதச் சிந்தனைகளையும், உலகத் தோற்றம் பற்றிய பெருவெடிப்புக் கொள்கையையும் ஒப்பிட்டு அறிவியலும் இலக்கியமும் ஆன்மீகமும் உலகத்தை எவ்வாறு விளக்க முற்பட்டுள்ளன என்பதை ஆய்வு செய்ய முற்படுகிறது.

**தொல்காப்பியம் :**

தமிழ் இலக்கண மரபின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் அறிவியல் நூலாகவும் திகழ்கிறது. மொழி, இலக்கியம், அறிவியல், ஆன்மீகம் என்னும் பல்வேறு பகுதிகளைத் தொல்காப்பியர் விளக்கிச் சென்றுள்ளார். உயிர்களின் தோற்றம் குறித்தும், உலகத் தோற்றம் குறித்தும் தொல்காப்பியம் கூறும் கருத்துக்கள் இன்றைய அறிவியலாரின் கருத்துக்களோடு ஒத்திருப்பதைக் காணமுடிகிறது.

தொல்காப்பியர் அகத்திணையியலில் நால்வகை நிலங்களைப் பற்றிக் கூறுமிடத்து ஐம்பூதங்களின் அடிப்படையில் நிலப்பாகுபாடு செய்துள்ளார்.

> "மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வருணன் மேய பெருமணல் உலகமும்
> முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
> சொல்லிய முறையான் சொல்லவும் படுமே."[1]

இந்நூற்பாவில்,

| | |
|---|---|
| காடுறை உலகம் | - முல்லை |
| மைவரை உலகம் | - குறிஞ்சி |
| தீம்புனல் உலகம் | - மருதம் |
| பெருமணல் உலகம் | - நெய்தல் |



Scanned with CamScanner